பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை / 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 18

நூல் 1 இஸ்லாமிய வழிகாட்டலின்படி நெருக்கம் கடைப்பிடிப்பதும் வெறுத்து விலகுதலும் / 23

1 அறிமுகம் / 25

2 இறைநிராகரிப்பாளர்களிடம் நேசம்கொள்வதின் அடையாளங்கள் / 34

1. ஆடை, பேச்சு போன்றவற்றில் ஒப்பாகுதல் / 34

2. மார்க்கத்தைப் பின்பற்ற முடியாதிருந்தும் வெளியேறாமல் தங்கியிருத்தல் / 35

3. இறைநிராகரிப்பாளர்களின் சுற்றுலா தளங்களை நேசித்தல் / 37

4. முஸ்லிம்களுக்கு எதிராக இறைநிராகரிப்பாளர்களுக்கு உதவுதல் / 38

5. இறைநிராகரிப்பாளர்களைப் பாதுகாவலர்களாக நம்பியிருத்தல் / 38

6. இறைநிராகரிப்பாளர்களைத் துதிபாடுகின்ற காரியங்களில் ஈடுபடுதல் / 41

7. அவர்களின் பண்டிகைகள், திருநாள்களில் கலந்துகொள்தல் / 42

8. அவர்களின் பதவி, திறமைகளைப் புகழ்ந்து பேசுதல் / 42

9. அவர்களின் பெயர்களை, பெயரிடும் வழக்கங்களைப் பின்பற்றுதல் / 43

10. அவர்களுக்காக இரங்கல் பாடுதல் / 43

3 அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டோரிடம் நேசம்கொள்வதின் அடையாளங்கள் / 45

1. முஸ்லிம்களுடன் வாழ்வதற்காக ஹிஜ்றத் செய்தல் / 45
2. மு஼மின்களுக்கு உதவுதல் / 46
3. மு஼மின்களின் சுக துக்கங்களில் பங்கெடுத்தல் / 47
4. மு஼மின்களுக்கு நன்மையை நாடுதல் / 48
5. முஸ்லிம்களைக் கண்ணியப்படுத்துதல் / 49
6. முஸ்லிம்களின் சிரமமான நேரங்களில்
ஆறுதலாக உடனிருத்தல் / 50
7. மு஼மின்களை அல்லாஹ்வுக்காகச் சந்திக்கச் செல்லுதல் / 51
8. மு஼மின்களின் உரிமைகளை மதித்தல் / 52
9. பலவீனர்களிடம் மென்மையாக நடத்தல் / 52
10. மு஼மின்களுக்காகப் பிரார்த்தித்தல் / 53
இறைநிராகரிப்பாளர்களிடமும் நீதியோடு நடத்தல் / 54
நேசம்தான் கூடாதே தவிர கொடுக்கல்
வாங்கலில் தடையில்லை / 56
4 'அல்வலா வல்பரா'வில் மக்கள் மீதுள்ள உரிமைகள்
அவற்றிலுள்ள மக்களின் வகைகள் / 59

**நூல் 2 பித்அத்துகள் – மார்க்கத்தின் பெயரால்
உருவாகும் புதுமைகள் / 69**

1 பித்அத் குறித்த விளக்கம் / 71
பித்அத்தின் வகைகள் / 72
பித்அத் குறித்த சட்டம் / 74
கொள்கை சார்ந்த பித்அத்துகளும் மற்றவையும் / 75
நல்ல பித்அத் எதுவுமில்லை / 77
2 பித்அத்துகள் தோன்றிய பின்னணி / 79
பித்அத்துகள் தலைதூக்கியதற்கான சில காரணிகள் / 82
3 பித்அத்துகளின் பரவலுக்கு அடிப்படைக் காரணிகள் / 84
1. மார்க்கச் சட்டங்களைப் பற்றிய அறிவின்மை / 84
2. மனோ இச்சையைப் பின்பற்றுதல் / 85

3. குர்ஆன் ஸுன்னாவை விட்டு
சுயபுத்தியை முற்படுத்துதல் / 86

4. இணைவைப்பாளர்களை ஒப்புமை செய்தல் / 87

4 பித்அத்துவாதிகள் குறித்த அஹ்லுஸ்
ஸுன்னா நிலைப்பாடு / 90

பித்அத்துவாதிகளுக்கு மறுப்பளிப்பதின் வழிமுறை / 94

5 இன்றைய காலப் பித்அத்துகள் / 97

குறிப்பிட்ட இடங்கள், அடையாளச் சின்னங்கள்,
நல்லடியார்களைக்கொண்டு பரக்கத் தேடுதல் / 101

2

இறைநிராகரிப்பாளர்களிடம் நேசம்கொள்வதின் அடையாளங்கள்

✿

பின்வரும் முக்கிய விசயங்கள் இறைநிராகரிப்பாளர்களோடு நேசம்கொண்டு அவர்களின் வெளிப்புற அடையாளங்களைப் பின்பற்றுவதின் தாக்கங்களாகும். அவர்களிடம் விசுவாசமாக இருப்பதின் பாதிப்புகளாகும்.

1. ஆடை, பேச்சு போன்றவற்றில் ஒப்பாகுதல்

ஆடை, பேச்சு மற்றும் இவை போன்ற விசயங்களில் இறை நிராகரிப்பாளர்களுக்கு ஒப்பாக இருப்பதும் அவற்றில் அவர் களையே பின்பற்றுவதும் ஓர் அடையாளமாகும்.

ஒருவன் அவர்களுடைய ஆடைகளிலும் பேச்சுகளிலும் இது போன்ற விசயங்களிலும் அவர்களுக்கு ஒப்பாக நடப்பது, அவன் அவர்கள்மீது கொண்ட பிரியத்தை வெளிப்படுத்து வதாக இருக்கின்றது. மேலும், அதனை அவன் உயர்வாகக் கருதுகிறான் என்பதையும் வெளிப்படுத்துகிறது. இதனால் தான், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَنْ تَشَبَّهَ بِقَوْمٍ فَهُوَ مِنْهُمْ

யார் ஒரு கூட்டத்திற்கு ஒப்பாக நடக்கிறாரோ, அவர் அவர் களைச் சேர்ந்தவர் ஆவார். (அறிவிப்பு: இப்னு உமர் ؓ, ஸுனனு அபீ தாவூது 4031, அல்இர்வாஃ 2384)

நமது மார்க்கம் நம்மீது அதனைத் தடைசெய்கிறது. இறை நிராகரிப்பாளர்களாகிய அவர்களுக்கென்று உள்ள குறிப் பிட்ட விசயங்களை நாம் பின்பற்றுவதையும், ஒப்புமை செய்வதையும் தடுக்கின்றது. மேலும், அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், வணக்கங்களையும், வழிமுறைகளையும்,

3

அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டோரிடம் நேசம்கொள்வதின் அடையாளங்கள்

✿

மூஃமின்களோடு நேசம்கொள்ளும் விசயத்தைக் குர்ஆனும் ஸுன்னாவும்[6] நமக்குத் தெளிவுபடுத்தி உள்ளன.

1. முஸ்லிம்களுடன் வாழ்வதற்காக ஹிஜ்ரத் செய்தல்

ஒருவர் தம்முடைய மார்க்கத்தைக் காத்துக்கொள்வதற்காக இறைநிராகரிப்பாளர்களுடைய நாட்டை விட்டுவிட்டு முஸ்லிம் களுடைய நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்வது ஓர் அடையாளமாகும். ஹிஜ்ரத் மறுமைநாள் வரை உள்ள கடமையாகும். இதற்கு முந் திய தலைப்பில் குறிப்பிட்ட விசயங்களைப் பொருட்படுத்தா மல் ஒரு முஸ்லிம் இறைநிராகரிப்பாளர்களுடைய நாட்டில் அவர்கள் மதத்தைச் சரியென்று பார்த்துக்கொண்டு வாழ்வது அவர்மீது ஹறாம் ஆகும்.

6 ஸுன்னா (اَلسُّنَّةُ), ஹதீஸ் (اَلْحَدِيْثُ): மொழி வழக்கில் ஸுன்னா என்றால் வழி, பாதை. மார்க்க வழக்கில் இச்சொல் நபி ﷺ அவர்களின் பேச்சுகள், செயல்கள், அங்கீகாரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும். அவை நபியவர் களின் தோழர்கள் மூலம் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. அவர்களிடமிருந்து சங்கிலித் தொடராக அறிவிக்கப்பட்டு, இஸ்லாமியப் பேரறிஞர்களான பல இமாம்களால் தொகுக்கப்பட்டன. இவ்வாறு தொகுக்கப் பட்ட செய்திகளை ஹதீஸ் என்பார்கள். (அஹாதீஸ் இதன் பன்மை.) மொழிரீதியாக ஹதீஸ் என்றால் செய்தி, தகவல், உரையாடல், வரலாறு, புதியது எனப் பொருள். நபியவர்களின் வருகைக்குப் பின் அவர்களைப் பற்றிய செய்திகளே பரவலாகியதால், ஹதீஸ் என்றாலே அவர்களைப் பற்றித்தான் எனும் நிலை உருவாகிவிட்டது. (ப.கு.)

4

‘அல்வலா வல்பரா’வில் மக்கள் மீதுள்ள உரிமைகள் அவற்றிலுள்ள மக்களின் வகைகள்

✿

அல்வலா வல்பராவில் மூன்று வகை மக்கள் உள்ளனர்.

முதல் வகையினர்: எந்த ஓர் எதிர்ப்பும் காட்டாமல் அவர்கள் உளரீதியாக உண்மையாக நேசிக்கப்படக்கூடியவர்கள். அவர்கள் நபிமார்கள், உண்மையாளர்கள், உயிர்த்தியாகிகள், நல்லடியார்கள். இவர்கள் அனைவரிலும் முன்னதாக அல்லாஹ்வின் தூதர் முஹம்மது ﷺ அவர்கள். நிச்சயமாக நம் உயிரையும், பெற்றோர்கள், பிள்ளைகள் மற்றும் உலக மக்கள் அனைவரை விடவும் நபியவர்களை நேசிப்பது நம்மீது கடமையாகும். மேலும், நபித்தோழர்கள், குறிப்பாக நேர்வழி பெற்ற கலீஃபாக்கள், சுவனத்தைக்கொண்டு நற்செய்தி சொல்லப்பட்ட நபித்தோழர்கள், மூஃமின்களுடைய அன்னையர்கள், நபி ﷺ அவர்களின் குடும்பத்தார், முஹாஜிர்கள், அன்ஸார்கள், பத்ர் போரில் கலந்துகொண்டவர்கள், அல்லாஹ்வால் பொருந்திக் கொண்ட ஒப்பந்தத்திற்கு சொந்தக்காரர்கள் மற்றும் மீதமுள்ள நபித்தோழர்கள், தாபிஊன் மற்றும் சிறந்த மூன்று நூற்றாண்டில் உள்ளவர்கள், கடந்து போனவர்களான உலமாக்கள், உம்மத்தின் நான்கு பெரும் இமாம்கள் ஆகியோர் இந்த வகையினரில் அடங்குவார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

وَالَّذِينَ جَاءُوا مِنْ بَعْدِهِمْ يَقُولُونَ رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِإِخْوَانِنَا الَّذِينَ سَبَقُونَا بِالْإِيمَانِ وَلَا تَجْعَلْ فِي قُلُوبِنَا غِلًّا لِلَّذِينَ آمَنُوا رَبَّنَا إِنَّكَ رَءُوفٌ رَحِيمٌ

மேலும், அவர்களுக்குப் பின் வந்தார்களே அத்தகையவர்கள் ‘எங்கள் இரட்சகனே! எங்களையும் விசுவாசம்கொள்வதில் எங்களை முந்திவிட்டார்களே அத்தகைய எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக! விசுவாசங்

1

பித்அத் குறித்த விளக்கம்

✿

முதலாவதாக, பித்அத்தின் வரைவிலக்கணம், அதனுடைய விளக்கங்கள் மற்றும் சட்டங்களை அறிவோம்.

பித்அத் என்றால் என்ன?

அறபுமொழியில் பித்அத் (بِدْعَةٌ) என்றால், புதிதான விசயத்திலிருந்து எடுக்கப்பட்டது. அதாவது, எந்த ஒரு முன்னுதாரணம் இன்றி உருவாக்குவது. அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள்:

بَدِيعُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ

வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றி அவன் படைக்கின்றான். (குர்ஆன் 2:117)

அதாவது, வானங்களையும் பூமியையும் அவன்தான் படைத்தான். அதுவும் அதற்கு எந்த ஒரு முன்னுதாரணம் இன்றிப் படைத்தான். மேலும், அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ مَا كُنْتُ بِدْعًا مِنَ الرُّسُلِ

(நபியே! அவர்களிடம்) நீர் கூறும்: (அல்லாஹ் அனுப்பிய) தூதர்களில் நான் புதியவனாக இருக்கவில்லை. (குர்ஆன் 46:9)

அதாவது, நான் அல்லாஹ்விடம் இருந்து உங்கள்பால் வந்த முதல் தூதராக இருக்கவில்லை. மாறாக, எனக்கு முன் எத்தனையோ தூதர்கள் கடந்து சென்றுள்ளனர்.

ஒரு மனிதன் பித்அத் செய்துவிட்டான் என்றால், இல்லாத ஒரு புதிய விசயத்தை உருவாக்கிவிட்டான் என்று பொருள். பொதுவாக பித்அத்துகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. நம்முடைய உலக வாழ்க்கையில் புதிதாக உருவாக்கும் விசயங்கள்.

2

பித்அத்துகள் தோன்றிய பின்னணி

✿

முஸ்லிம்களுடைய வாழ்க்கையில் பித்அத் வெளிப்படுவதை இரண்டு விசயங்களில் உள்ளடக்கலாம்.

1. பித்அத் தோன்றிய நேரம்

இமாம் இப்னு தைமிய்யா[16] ﵀ கூறுகிறார்கள்: அறிந்துகொள்! இஸ்லாமியக் கல்வி மற்றும் வணக்கவழிபாடுகள் சம்பந்தமான பித்அத்துகள் நேர்வழி பெற்ற கலீஃபாக்களுடைய கடைசி காலத்தில் தோன்றியது. அது மட்டுமின்றி, அது நபி ﷺ அவர்களுடைய முன் அறிவிப்புமாகும்.

16 இப்னு தைமிய்யா: இயற்பெயர், அபுல் அப்பாஸ் தகீய்யுத்தீன் அஹ்மது இப்னு அப்துல் ஹலீம். துருக்கியின் ஹர்ரான் நகரில் ஹிஜ்ரீ 661 (கி.பி. 1263)இல் பிறப்பு. அவர்களின் தந்தை, பாட்டனார், மாமா அனைவரும் அன்றைய ஹன்பலி மத்ஹபின் பிரபல அறிஞர்கள். ஏழு வயதில் அவர்களின் குடும்பம் சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸிற்குக் குடிபெயர்ந்தது. இமாமவர்கள் இருநூறுக்கும் மேற்பட்ட அறிஞர்களிடம் கல்வி பயின்றார்கள். அவர்களின் ஆசிரியர்களில் ஒருவரும் சிரியாவின் உயர்நீதிபதியுமான காழீ ஷம்சுத்தீன் அல்மக்திஸி ﵀ அவர்கள். இமாமவர்களின் கல்வி ஆழத்தைப் பார்த்துபதினேழாம் வயதிலேயே அவர்கள் ஃபத்வா தருவதற்கான அதிகாரத்தை வழங்கினார்கள். இப்னு தைமிய்யா ﵀ அவர்கள் தம் ஆயுள் முழுவதையும் அல்லாஹ்வின் மார்க்கப்பணிகளுக்கு அர்ப்பணித்து, நூற்றுக்கணக்கான நூல்களையும் எழுதியுள்ளார்கள். அத்தஹபீ, இப்னுல் கய்யிம் அல்ஜவ்ஸிய்யா, இப்னு கஸீர், இப்னு அப்துல்ஹாதீ போன்ற இமாம்கள் இப்னு தைமிய்யாவின் மாணவர்களில் முக்கியமானவர்கள். பலத்த எதிர்ப்புகளுக்கும் போர்களுக்கும் மத்தியில் வாழ்ந்த இமாமவர்கள், ஹிஜ்ரீ 728 (கி.பி. 1328) துல்கஅதா மாதம் டமாஸ்கஸ் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்தபோது மரணித்தார்கள்.

3

பித்அத்துகளின் பரவலுக்கு அடிப்படைக் காரணிகள்

✿

பித்அத்துகள் பரவுவதற்கு அடிப்படையான காரணிகளாகப் பின்வரும் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

1. மார்க்கச் சட்டங்களைப் பற்றிய அறிவின்மை
2. மனோ இச்சையைப் பின்பற்றுவது
3. குர்ஆன் ஸுன்னாவிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், புத்திகளுக்கு, தனி மனிதர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது.
4. இணைவைப்பாளர்களை ஒப்புமை செய்வது; அவர்களைப் பின்பற்றுவது.

இவை ஒவ்வொன்றையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

1. மார்க்கச் சட்டங்களைப் பற்றிய அறிவின்மை

நபி ﷺ அவர்களின் ஸஹாபாக்களாகிய அந்தச் சிறந்த கூட்டங்கள் வாழ்ந்த காலங்கள் கடந்து போய்விட்டதால் பித்அத் வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் தோன்றின. அவர்களின் காலத்தைவிட்டுத் தூரமாக தூரமாக மார்க்க அறிவு குறைந்து அறிவின்மை தலை தூக்கியது. இதனை நபி ﷺ அவர்கள் தெளிவுபடுத்தி உள்ளார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَنْ يَعِشْ مِنْكُمْ فَسَيَرَى اخْتِلَافًا كَثِيرًا

உங்களில் யார் அதிகமான காலம் வாழ்வாரோ அவர் அதிகமான கருத்துவேறுபாட்டைக் காண்பார். (அறிவிப்பு: இர்பாள் இப்னு ஸாரியா ﷺ, ஸுனனு இப்னு மாஜா 43, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 37)

4

பித்அத்துவாதிகள் குறித்த அஹ்லுஸ் ஸுன்னா நிலைப்பாடு

✿

பித்அத்துவாதிகளின்மீதும் அவர்களின் வழிமுறைகள்மீதும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் உடைய நிலைப்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. தொடர்ச்சியாக அவர்கள் பித்அத்துவாதிகளுக்கு மறுப்புகளையும் பதில்களையும் கொடுத்த வண்ணமே உள்ளனர். அவர்களின் வழிகேட்டை மக்களுக்கு எடுத்துக்காட்டியும் மக்கள் அதில் விழுந்துவிடாதவாறு அவர்களைத் தடுத்துக்கொண்டும் இருக்கின்றனர்.

அவற்றில் சில முன்மாதிரிகள்:

1. உம்மு தர்தா ﵂ அவர்கள் கூறுகிறார்கள்:

دَخَلَ عَلَيَّ أَبُو الدَّرْدَاءِ وَهُوَ مُغْضَبٌ فَقُلْتُ مَا أَغْضَبَكَ فَقَالَ وَاللَّهِ مَا أَعْرِفُ مِنْ أُمَّةِ مُحَمَّدٍ صلى الله عليه وسلم شَيْئًا إِلاَّ أَنَّهُمْ يُصَلُّونَ جَمِيعًا

அபூ தர்தா கோபமாக என்னிடம் வந்தார்கள். நீங்கள் கோபமாக இருக்கக் காரணம் என்ன? என்று கேட்டேன். அதற்கு, 'அல்லாஹ்வின்மீது ஆணையாக! நபி ﷺ அவர்களின் சமூகம் கூட்டாகத் தொழுகிறார்கள் என்பதைத் தவிர வேறு எதையும் அவர்களிடம் நான் காணவில்லை!' என்றார்கள். (புகாரீ 650)

2. அம்ரு இப்னு யஹ்யா ﵀ அவர்கள் கூறுகிறார்கள்:

أَخْبَرَنَا الْحَكَمُ بْنُ الْمُبَارَكِ ، أَنْبَأَنَا عَمْرِو بْنِ يَحْيَى، قَالَ: سَمِعْتُ أَبِي يُحَدِّثُ عَنْ أَبِيهِ قَالَ: كُنَّا نَجْلِسُ عَلَى بَابِ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ ، رَضِيَ الله عَنْهُ قَبْلَ صَلاَةِ الْغَدَاةِ فَإِذَا خَرَجَ مَشَيْنَا مَعَهُ إِلَى الْمَسْجِدِ فَجَاءَنَا أَبُو مُوسَى الأَشْعَرِيُّ ، رَضِيَ الله عَنْهُ فَقَالَ أَخَرَجَ إِلَيْكُمْ أَبُو عَبْدِ الرَّحْمَنِ بَعْدُ قُلْنَا لاَ بَعْدُ فَجَلَسَ مَعَنَا حَتَّى خَرَجَ فَلَمَّا

5

இன்றைய காலப் பித்அத்துகள்

✿

சிறந்த சமுதாயங்களாகிய ஸஹாபா, தாபிஊன், தபஉ தாபிஈன் போன்ற நல்லோர்களைவிட்டு காலங்கள் உருண்டோடியதாலும் குறைவான அறிவினாலும் இன்று பித்அத்துகள் நிரம்பி வழிகின்றன. நிறைய அழைப்பாளர்கள் பித்அத்தின் பக்கமும், அல்குர்ஆன் ஸுன்னாவிற்கு எதிரான கொள்கையின் பக்கமும், தனி மனிதர்களின் பக்கமும், இணைவைப்பாளர்களை ஒப்புமை செய்வதின் பக்கமும், அவர்களின் பழக்க வழக்கங்கள் பக்கமும் சுறுசுறுப்பாக அழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَتَتْبَعُنَّ سَنَنَ مَنْ كَانَ قَبْلَكُمْ

நீங்கள் உங்கள் முன் சென்றோரின் வழியைப் பின்பற்றுவீர்கள். (அறிவிப்பு: அபூ ஸயீத் அல்குத்ரீ ؓ, புகாரீ 7320)

அதில் ஒன்றுதான் ரபீஉல் அவ்வல் மாதத்தில் நபி ﷺ அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுவது. இப்படி நபிமார்களின் பிறந்த நாள்களைக் கொண்டாடுவது கிறித்தவர்களின் பழக்கங்களாகும். அதையே முஸ்லிம் மக்களும் உள்வாங்கி அவர்களை ஒப்புமை செய்து முஹம்மது ﷺ அவர்களுக்குப் பிறந்தநாள் விழா கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள்.

முஸ்லிம்களின் அறிவின்மை காரணமாகவும் வழிகெட்ட தலைவர்களின் காரணமாகவும் ஒவ்வொரு வருடமும் ரபீஉல் அவ்வல் மாதத்தில் நபி ﷺ அவர்களுக்கு இவர்களும் பிறந்த நாள் கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள். இதற்கென சிலர் பள்ளிவாசல்களை அலங்கரித்து அதில் பிறந்த நாள் விழா கொண்டாடுகின்றனர். இன்னும் சிலர், தங்கள் வீடுகளிலும், சிலர் அதற்கென்று மண்டபங்களைத் தயார்படுத்துகின்